பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

13-05-19..

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 30 செவ்வாய்க்கிழமை (12-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 166

### சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி நேற்று வீரகாவியம்

# ஆனையிறவில் திடீர்த் தாக்கு!

# 22 காவல் அரண்கள் அழிப்பு!!

## 15க்கும் அதிக படையினர் பலி

### இரு வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 12

ஆனையிறவு தட்டுவன்கொட்டிப் பகுதியில் அமைந்திருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தின் தொடர் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை 2 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

சுமார் அரை மணி நேரம் நீடித்த இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள், படையினரின் 22 காவலரண்களைக் கைப்பற்றி அவற்றைத் தகர்த்தனர்; 15 இற்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர்; பெருமளவு ஆயுதங்களையும் படையினரின் மூன்று சடலங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

விடுதலைப் புலிகளின் — சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின், கிளிநொச்சி மாவட்டத் தாக்குதல் பிரிவு இத்துணிகரத் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தியது. காவலரண்களை ஒரு பகுதியினர் தாக்க, மறு பகுதியினர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தெரிவுக்குழு முயற்சி தோற்றால்

## தொண்டமான் வடக்கே சமாதான விஜயம் செய்வார்

கொழும்பு, மே 12

''நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் யோசனைகள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறுமேயானால், சமாதான விஜயம் ஒன்றை மேற்கொண்டு நான் யாழ்ப்பாணம் செல்வேன்.''

— அமைச்சர் தொண்டமான் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''பௌத்த தூதுக்குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு சமாதான விஜயம் ஒன்றை மேற்கொண்டு திரும்பியுள்ளது. ஆகவே நான் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதை இனி எவருமே தடுக்க முடியாது.'' — என்றும் அவர் சொன்னார்.

''நாடாளுமன்றத் தெரிவுக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கே இராணுவத்துடன் ஜே.வி.பி. சந்தேக நபர்கள்!

### 940 பேரை அனுப்ப அரசு ஆலோசனை

கொழும்பு, மே 12

பெல்வத்தை தடுப்பு முகாமில் இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள — 940க்கும் அதிகமான — தென்பகுதி தீவிரவாத சந்தேக நபர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கி, வடக்கு - கிழக்கு யுத்த முனைக்கு அனுப்பும் சாத்தியக்கூறு பற்றி அரசு அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

விசாரணை மற்றும் புனர்வாழ்வு உதவிகள் இன்றி நீண்ட காலம் இத்தீவிரவாத சந்தேக நபர்கள் பெல்வத்தை முகாமில் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் —

விரக்தியின் உச்ச நிலையில் இச்சந்தேக நபர்களில் சிலர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## படையினரை திணறடிக்கும் புலிகளின் 'U' வடிவ தாக்குதல்

கொழும்பு, மே 12

விடுதலை புலிகள் நடத்தும் ''U'' வடிவத் தாக்குதல்கள் படையினரைத் திணறடிக்கச் செய்கின்றன.

கடந்த ஞாயிறு ஆங்கில வார இதழ் ஒன்றில் ரொஹான் குணசேகரா என்ற பாதுகாப்புத்துறை செய்தியாளர் எழுதிய கட்டுரையில் இவ்விடயம் விவரிக்கப்பட்டிருக்கிறது. ''கிழக்கு இன்னும் பிரச்சினையாக இருக்கிறது'' — என்ற தலைப்பில் அவர் எழுதிய அந்தக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தரையாலும் கடலாலும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இருந்து விடுதலைப் புலிகள் தங்கள் படையினரை நகர்த்... இந்த நிலை இருக்கும் ...

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்!

ஆனையிறவு தட்டுவன் கொட்டிப்பகுதியில் நேற்று அதிகாலை நடத்திய அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளினால் அள்ளப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

- ★ ஏ.கே எல் எம் ஜி. — 2
- ★ அதற்குரிய மகஸின் — 15
- ★ தொடர் ரவைகள் — 2 000
- ★ ஆர்.பி ஜி. — 2
- ★ அதற்குரிய ஷெல் — 13
- ★ புறப்லர்கள் — 8
- ★ ரி 56 ரகத் துப்பாக்கி — 8
- ★ அதற்குரிய மகஸின் — 22
- ★ 40 மி. மீ, பிஸ்டல் — 1
- ★ அதற்குரிய ஷெல் — 14
- ★ சிக்னல் பிஸ்டல் — 1
- ★ ரி 81 மகஸின் — 13
- ★ ஜி 3 மகஸின் — 1
- ★ நடுத்தர ரவைகள் — 16 ஆயிரம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழுவில் இருந்து எதிரணிகள் வெளியேறும்!

கொழும்பு மே 12

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து வெளியேறும் யோசனை ஒன்றை கூட்டு எதிர்க்கட்சி அணி பரிசீலனை செய்து வருகின்றது.

எதிர்க்கட்சி வட்டாரங்களை ஆதாரங் காட்டி 'சண்டே ரைம்ஸ்' இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்ற வளாகத்தில் நடத்தப்பட்ட கூட்டு எதிர்க்கட்சிக் கூட்டத்தில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து எதிர்க்கட்சிகள் வெளியேற வேண்டும் என்ற பிரேரணையை ''ஹெல உறுமய'' அணித் தலைவரும் சுதந்திரக்கட்சி எம். பியுமான திலக் கருணாரத்னா கொண்டு வந்தார். மாத்தளை மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. நந்தமித்ர எக்கநாயக்கா அதனை ஆதரித்தார்.

உடுகம்பொல விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 21 கொமாண்டோக்களை விடுவிப்பதற்கு முயற்சி!

கொழும்பு. மே 12

போர்க் கைதிகளாக உள்ள 21 இராணுவ கொமாண்டோக்களை விடுவிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் யாழ்ப்பாணத்தில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத் தூதுக்குழு ஒன்று பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்றது.

தூதுக் குழுத் தலைவர் பியரே வெட்டாச் இப்படித் தெரிவித்தார் என்று ''சண்டே ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு முல்லைத்தீவில் கடல் வழியாகத் தரையிறங்கிய போது புலிகளின் தாக்குதலில் அழிக்கப்பட்ட படையணியைச் சேர்ந்தவர்களே இந்த 21 பேருமாவர்.

இவர்கள் முதலில் உயிரிழந்து விட்டனர் எனக்கருதப் பட்டது என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

## தமிழக முரசொலியின் ஆசிரியர் கைதாகி விடுதலை

சென்னை, மே 12

முரசொலி ஆசிரியர் எஸ். செல்வம் சட்டசபை உரிமைகளை மீறியதற்காக நேற்று மாலை 4 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

சட்டசபைக் குறிப்பேட்டில் இருந்து நீக்கப்பட்ட பகுதியை முரசொலியில் பிரசுரித்ததற்காக அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று சபாநாயகர் உத்தரவிட்டிருந்தார். அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து அவரைக் கைது செய்து தம்முன் ஆஜர் செய்யும்படி சபாநாயகர் கைது வாரண்டு பிறப்பித்திருந்தார்.

அந்த வாரண்டை செயல்படுத்துவதைத் தடுக்கும் படி கோரி திரு. செல்வம் தாக்கல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் பிரபாவுக்கு இசைக் கலைஞர் நன்றி

யாழ்ப்பாணம், மே 12

இன விடுதலையையும், கலை வளர்ச்சியையும் இரு கண்களாக மதித்து தமிழிசை விழாவுக்கு தமது ஆசியையும் பேராதரவையும் நல்கியமைக்காக, தலைவர் வே பிரபாகரனுக்கு தமிழீழக் கலைஞர்கள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார்கள்.

போர்க்கால சூழ்நிலையிலும் கர்நாடக இசையில் மக்களுக்கு ஈடுபாட்டை உண்டாக்கும் விதத்தில் தமிழிசை விழாவை ஓர் எழுச்சி விழாவாக நடத்தியமைக்காக விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்துக்கும் கலைஞர்கள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர். [அ-இ]

# ஈழ அகதிகளை அனுப்புவதை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம்

## பாட்டாளி மக்கள் கட்சி நடத்தியது

தமிழ்நாட்டில் இருந்து ஈழ அகதிகளை அனுப்பக்கூடாது என்று கோரி பாட்டாளி மக்கள் கட்சியினர் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

சென்னை சேப்பாக்கம் எழிலகம் அருகே கடந்த 5 ஆம் திகதி இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டில் கல்வி பயில அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

அதேதினம் தமிழ்நாடு சட்டசபையில் பேசிய பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த பண்ருட்டி இராமச்சந்திரன், "ஈழ அகதிகள் தம் விருப்பத்துக்கு மாறாக திருப்பி அனுப்பப்படுகிறார்கள். இந்தியாவை பின்பற்றி மேலை நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழர்களும் திருப்பி அனுப்பப்படலாம். இந்தப் பிரச்சினையை உலகக் கண்ணோட்டத்துடன் மறுபரிசீலனை செய்யவேண்டும்" என்று கோரினார். (இ-3)


கமநல சேவைகள் திணைக்களத்தின்

பெரும்பாக உத்தியோகத்தர் தரம் II

பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான

திறந்த போட்டிப் பரீட்சை - 1992

பட்டதாரிகளுக்கான மேற்படி போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டல் பயிற்சிகள் 18 — 05 — 92 பிற்பகல் 4-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

★ திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

வழிகாட்டல் பயிற்சியாளர்:
திரு. நா. குழந்தைவேலு, B. A. [Hons ]
D. O. (H. Q.)

தொடர்புகள்: அதிபர்,
உயர்கலைக் கல்லூரி,
ஆனைப்பந்தி.

[சி/2298]


# 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்:
08 — 03 — 1933

மறைவு:
22 — 04 — 1992



அமரர்

## திருமதி பத்மநாதன் சுவர்ணபூபதி

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், முன்னின்று நடத்தி உதவி செய்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எமது இல்லத்தில் இன்று 12-05-92 செவ்வாய்க்கிழமை இடம்பெறும் சபிண்டீகரண கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

601, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

கணவன்,
பிள்ளைகள்.

[20962]

# இன்று

யாழ்ப்பாணம், மே 12

வண்ணார்பண்ணை சிவன் கோவிலில் இடம்பெற்று வரும் லட்சார்ச்சனை நிகழ்ச்சியில் இன்று மாலை 6 மணிக்கு புலவர் ஈழத்துச் சிவானந்தன் "புறம் புறந் திரிந்த செல்வமே" என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

★ ★ ★

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாம் கட்ட ஆட்டங்களில் இன்று யாழ். சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தா அணி மோதும். இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். (உ)

★ ★ ★

டாக்டர் அருணாசலம் சிவபாதசுந்தரம் இரண்டாவது நினைவுப் பேருரை இன்று பி. ப. 3. 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

"குழந்தைகளைப் பாதுகாப்பதில் எதிர்நோக்கப்படும் சமூக - கலாச்சார சவால்கள்" என்னும் பொருளில் பேராசிரியா செ சிவஞானசுந்தரம் [நந்தி] நினைவுப் பேருரை ஆற்றுவார். [அ]

## பண்பாட்டு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 12

"தமிழ்ப் பண்பாட்டின் மீள் தரிசனம்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் பின் வீதியில் அமைந்துள்ள ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு ஆய்வு நிறுவனத்தில் நடைபெறும்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி கருத்தரங்கில் உரை நிகழ்த்துவார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் கருத்தரங்கிற்கு தலைமை வகிப்பார். [இ]


SHAMROCK
யாழ். சுண்டுக்குளி

93 - அளவையியல்
ஆரம்பம் — புதிய பிரிவு
திரு. சோதிலிங்கம்
12 — 05 — 92
செவ். வியா. 3 — 4

★ 94 வர்த்தகம்
— திரு பசில்

★ கணக்கியல்
— திரு சௌந்தி

(20954)



Personal
New Science
Centre,
Jaffna.

92 A/L
Day Classes

ஆரம்பம்;
நாளை [12-05-1992]
9-00 மணி

Pure. / App. :-
திரு. குணசிங்கம்
Che. :-
திரு. செல்வா
Phy. :-
பிரபல ஆசிரியர்
Zoo. :-
பிரபல ஆசிரியர்

[சி/1999]


# புலிகளை தடை செய்வதில் வெளிநாட்டு சிக்கல் உண்டு

## கலைஞர் கருணாநிதி கூறுகிறார்

சென்னை, மே 12

விடுதலைப் புலிகளைத் தடை செய்வதில் வெளிநாடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளும் அடங்கியுள்ளன. அது பற்றி மத்திய அரசே தீர ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும்.

செய்தியாளர் மாநாடொன்றில் பேசும் போது தி. மு க தலைவர் கலைஞர் மு. கருணாநிதி இவ்வாறு சொன்னார்.

1983 ஆம் ஆண்டு இலங்கைப் போராளிக் குழுக்கள் தமிழ் நாட்டில் பயிற்சி முகாம்களை அமைக்க இடம் தந்து—

இந்தியாவின் சில பகுதிகளில், இந்திய இராணுவ அதிகாரிகளாலேயே அவர்களுக்குப் பயிற்சியும் வழங்கி—

கோடிக்கணக்கான பணமும் ஆயுதங்களும் வழங்கி—

அவர்களை ஊக்கப்படுத்தியவர்கள் யார் என்பதை எல்லாப் பத்திரிகைகளும் எழுதிக் கொண்டிருக்கின்றன. நாட்டு மக்களும் அதனை நன்கு அறிவர்.

தி. மு. கவை பொறுத்தவரை, எதிர்க் கட்சியாக இருந்தாலும், ஆட்சியில் இருந்தாலும் இலங்கையில்— தமிழ் ஈழத்தில் வாழ்கின்ற மக்களுக்கு உரிமையும், நிலையான அமைதியும் வேண்டும் என்பதற்காக குரல் கொடுத்து வந்திருக்கிறதே தவிர போராளிக் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல்களை ஆதரிக்கவில்லை.

—இப்படி திரு. கருணாநிதி மேலும் கூறினார். [த-3]

# கொழும்பு பல்கலைக்கழகம் மூடப்பட்டது

கொழும்பு, மே 12

கொழும்பு பல்கலைக்கழகம் நேற்று முதல் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது.

மாணவர் அமைதியின்மை காரணமாக பல்கலைக்கழகம் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. [உ-எ]

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை அப்புத்துரை

கணபதிப்பிள்ளை அப்புத்துரை 11-05-92 காலமானார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், நேசராசா [சுவிஸ்], அருச்சுணராசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும் சவீத்தா, காலஞ்சென்ற சதீசனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் 12 - 05 - 92 இன்று மயிலியதனை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. துரைராசா.
ஒய்வுபெற்ற தபாலதிபர்
(பெறாமகன்)
அ. செல்லம்மா
[மனைவி]

நெற்கொழு ஒழுங்கை,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.
[20961]

## திருமதி பூரணம்மா வேலுப்பிள்ளை

கொல்லன்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி பூரணம்மா வேலுப்பிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், திரு. சிவகுமார் [பொறியியலாளர், கொழும்பு], திருமதி திலகவதி முருகையா, திருமதி பத்மாவதி மழவராயர், திருமதி பகவதி சிவசுப்பிரமணியம், செல்வி மனோன்மணி வேலுப்பிள்ளை, திருமதி சத்தியவதி அருள்நாயகம், திருஞானசம்பந்தமூர்த்தி [ஜேர்மனி], திருநாவுக்கரசு [முறிகண்டி] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. முருகையா [தெல்லிப்பழை], திரு. சிவசுப்பிரமணியம் [கீரிமலை], திரு. மழவராயர் [புத்தூர்], திரு. அருள்நாயகம் [லண்டன்], திருமதி பஞ்சசீலா [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமியாரும ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று [11-5 1992] திங்கட்கிழமை காலை 11 மணிக்கு அவரின் இணுவில் இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கம் தாவடி இந்து மயானத்தில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி மனோன்மணி
[ஆசிரியை, இராமநாதன் கல்லூரி]

பரராசசேகரப் பிள்ளையார் கோவில்
தெற்கு வீதி, இணுவில்.
(4846)

## றிச்சேட் குமாரத்தி

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய றிச்சேட் குமாரத்தி அவர்கள் 11 - 05 - 1992 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் றிச்சேட் டோமினிக்கின் அன்பு மனைவியும், பாஸ்கரன் [பாறின்], சாயந்திரன் [ஜேர்மனி], சுவேந்திரன், சுபா ஆகியோரின் அன்புத் தாயாரும், மைக்கல், பிரான்சிஸ், காலஞ்சென்ற சவுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஞ்சி, டக்கிளஸ் சேவியர், றிச்சேட் ஆகியோரின் மைத்துனியும், மகிழினியின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 12 - 05 - 1992 செவ்வாய்க்கிழமை [இன்று] மாலை 3-00 மணிக்கு 22, இராஜேந்திரா வீதி இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக யாழ் பேராலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்று கொள்ளவும்.

தகவல்
கணவன்

(4854)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து ஒருமித்த யோசனை பெற முயற்சி

## அரசியல் கட்சித் தலைவர்கள் மட்டத்தில் ஆலோசனை

கொழும்பு, மே 12

வடக்கு—கிழக்கு இணைப்பு விடயத்தில் தெரிவுக் குழுவின் ஒருமித்த யோசனையைப் பெறுவதில் அரசியல் கட்சிகள் மட்டத்தில் தற்போது தீவிர ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெரிவுக்குழு ஒருமித்த தீர்வு ஒன்றை முன் வைக்கும் என்பதில் தெரிவுக்குழுத் தலைவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் வடக்கையும், கிழக்கையும் தனித்தனியாகப் பிரிக்கும் எந்த யோசனையையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று தமிழ்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

அப்படியான ஒரு நிலைமை ஏற்பட்டால் தமிழ் கட்சிகள் கூடி தனியான ஒரு யோசனையை முன்வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் வடக்கு-கிழக்கு மாகாணத்தை இரு ஆளுநர்களின் கீழ் தனித்தனியாகப் பிரித்து, இரு மாகாணங்களும் இணைந்து செயற்படக் கூடிய சட்டம் இயற்றும் அதிகாரசபை அமைப்பது தெரிவுக்குழுவின் உத்தேச தீர்வாக இருக்கலாம் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-3)

### மன்னாருக்கு அம்புலன்ஸ்

கொழும்பு, மே 12

யுனிசெவ் நிறுவனத்தால் வடக்கு— கிழக்கு வைத்திய சாலைகளுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட 10 அம்புலன்ஸ் வாகனங்களில் ஒன்று மன்னார் மாவட்டத்திற்கு சுகாதார சேவைகள் அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளது. [இ-த-3]

### அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், மே 12

கிழக்கு மாகாண பிரதிப் பொலீஸ் மா அதிபர் அலுவலகம் கடந்த புதனன்று மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டது. [உ-5]


## உதயன் சேவை நிலையம்

சுன்னாகம்.

வலிகாமம் வடக்கு வாழ் மக்களே!

உதயன் தலைமைப் பணியகத்தில் நீங்கள் செய்ய வேண்டிய சகல அலுவல்களையும் சுன்னாகத்திலேயே செய்து கொள்ளலாம்!

இந்த வெயில் வேளையில், வாகனப் போக்குவரத்து இல்லாத காலத்தில் உங்கள் பிரயாணக் கஷ்டங்களையும், ஏனைய சிரமங்களையும் தவிர்க்க சுன்னாகம் உதயன் சேவை நிலையத்துக்கு வாருங்கள்

★ விளம்பரங்கள், செய்திகள்

★ தமிழ், ஆங்கில தட்டெழுத்து - வேலைகள், றோணியோ பிரதி செய்தல்

★ கவர்ச்சியான அச்சு வேலைகள்

எதுவானாலும் உடன் நாடுங்கள்:

**உதயன் சேவை நிலையம்,**

82, கே. கே. எஸ். வீதி,
(ப. நோ. கூ. ச தலைமைச் செயலகத்திற்கு அருகாமையில்)
சுன்னாகம். [சி-1963]



NEW SCIENCE ACADEMY
JAFFNA.

**92 A/L**
**DAY PAPER CLASS**

PHYSICS
கணேசன்
CHEMISTRY
சண்
BOTANY
குணசிலன்
ZOOLOGY
ஸ்ரீகரன்

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

PURE / APPLIED MATHS
வெக்டர்

ஆரம்பம்:
12 — 05 — 1992
Tuesday 9.00 a. m.

[சி-2305]



## கம்பியூட்டர் கல்வி

★ Diploma in Data Processing and Computer Programming in BASIC Language

★ dBASE III+, LOTUS 1-2-3, WORD STAR 5 5 (Latest Version)

ஆரம்பம்: 15—05—1992 திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்
16—05—1992 சனி, ஞாயிறு வகுப்புகள்

Computer Science வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

றேடியோ, T V கல்வி

Radio, T. V., Deck Repairing வகுப்புகள்
(துரித விசேட பயிற்சிப் பாடத்திட்டம்)

ஆரம்பம்: 15—05—1992 திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்
16—05—1992 சனி, ஞாயிறு வகுப்புகள்

மேலதிக விவரங்களுக்கு:

**யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்**




'சதா பொன்ஸ்'
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[இ-2309]


# தாமாக முன்வந்து கொடுக்கும் அரிய தானமே இரத்த தானம்

## செஞ்சிலுவை தின கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், மே 12

யுத்த காலங்களிலும் மனித நேயம் பேணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதே செஞ்சிலுவைச் சங்க அமைப்பின் குறிக்கோளாகும். யுத்தத்தின் மத்தியிலும் உயிர் காக்கும் சேவையாக இன்றைய தினத்தில் இரத்த தானம் வழங்கும் வைபவம் இடம் பெற்றது பெருமைக்குரியதாகும். இரத்தம் கேட்டுக் கொடுப்பதல்ல, தாமாக முன் வந்து கொடுக்கும் அரிய தானம் அது.

செஞ்சிலுவைச் சங்கத் தினத்தை முன்னிட்டு சங்கத் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ். சிவஞானசுந்தரம் (நந்தி) மேற்கண்டவாறு கூறினார்.

செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் சி.எஸ்.நச்சினார்க்கினியன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு ஜாக் உட்படபலர் உரையாற்றினர். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இதேவேளை — செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு காலையில் செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள், தொண்டர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்த தானம் வழங்கினர். [த-111-18]

# வீதிகளைத் திருத்த புதிய முறை: ஆய்வுகள் வெற்றியளித்துள்ளன

யாழ்ப்பாணம், மே 12

யாழ். நகரின் வீதிகளைத் திருத்துவதில் புதிய முறைகளைக் கடைப்பிடிக்க மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வெற்றியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வீதிகளைத் திருத்தத் தேவைப்படும் கல், மண், தார் போன்ற பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து யாழ். மாநகரசபையின் பொறியியல் பிரிவு இந்த ஆய்வினை மேற்கொண்டது.

கல், தார் என்பவற்றுடன் நெல் உமியையும் சேர்த்து வீதிகள் போடவும்—

மணல், தார் ஆகியவற்றுடன் சுண்ணாம்பு சேர்ந்த கலவை ஒன்றைப் பாவித்து சிறு குழிகளைச் செப்பனிடவும்— பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வெற்றியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டிகரண அழைப்பும்



திருமதி
**இலட்சுமிப்பிள்ளை சிற்றம்பலம்**
(குஞ்சரமக்கா)
(இளைப்பாறிய ஆசிரியை)

மலர்வு: 19—07—1911
உதிர்வு: 12—04—1992

12-04-1992 அன்று இறைபதம் அடைந்த, இளைப்பாறிய ஆசிரியை இலட்சுமிப்பிள்ளை சிற்றம்பலம் அவர்களின் 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும், சபிண்டிகரணம் முதலான ஆன்மீகக் கிரியைகளும் அன்னாரின் இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளதால் அவ்வமயம் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

—குடும்பத்தினர்.

''திருவதிகை'',
விக்கினேஸ்வரா வீதி,
நுகவில்,
கரவெட்டி.

[20947]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

09-05-92 வவுனியா இராணுவ சோதனை முகாமில் இரண்டு பாஸ்போர்ட்டுகள், இரண்டு மூக்குக்கண்ணாடிகள் மற்றும் விலாசங்கள் அடங்கிய நோட் புத்தகம் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சின்னையா செல்லையா, வண்ணார்பண்ணை, வடமேற்கு, வைரவகோவிலடி, ஆனைக்கோட்டை, என்ற விலாசத்திற்கு தயவுசெய்து அறிவிக்கவும். [20946]

### மணமகள் தேவை

ஜேர்மனியில் தொழில் புரியும் 27 வயது, ஆயிலிய நட்சத்திர வாலிபருக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. வெளிநாட்டில் இருந்தால் விரும்பத்தக்கது. தொடர்பு: செ. விஜயரத்தினம், லட்சுமி திருமணசேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். [20943]

### மணமக்கள் தேவை

இந்து சைவபோசன குற்றமற்ற 29 [ஆயிலிய நட்சத்திரம்] மணப்பெண்ணுக்கும், 33 வயது, பரணி நட்சத்திரமுடைய வேலை செய்யும் மணமகனுக்கும் பெற்றோர் தனியாகவோ, மாற்றாகவோ தேடுகின்றனர். மங்கள, ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [20908)

### மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்து, 36 வயது, அழகிய, படித்த, செவ்வாய்க் குற்றமற்ற ஒரே மகளுக்கு பெற்றோர் ஆசிரியத் தரமுள்ள மணமகனைத் தேடுகின்றனர். நட்சத்திரம்: ஆயிலியம், 2 ஆம் பாதம், சீதனம் தரப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [4847)

### சங்கீதம்

சங்கீதம் வினா - விடை தயாரிப்பு: ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா 6முதல் 9வரை பயிலும் மாணவர்களுக்கும், சங்கீதசபை இரண்டாம் தரம் பயிலும் மாணவர்களுக்கும் பயன் தருவது நடுவுத்துருத்தி நிறுவனத்தின் வெளியீடு; கிடைக்குமிடம் ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [20931]

### அச்சுக்கோர்ப்பாளர் தேவை

அச்சுக்கோர்ப்பாளர் தேவை இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பயிலுநர்களுக்கும் இடமுண்டு. 20 - 05 - 92ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 842, மே/பா உதயன். [சி-2297]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் வெற்றி தருமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடனே கிடைக்கும். ஜாதகம், குறிப்பு எழுதிப் பலன் சொல்லப்படும். விவாகப் பொருத்தம், எண் சோதிடம் பார்த்துச் சொல்லப்படும். தொடர்பு: த. சிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [20945,

### வர்த்தக வினா - விடை

G. C. E (O/L), ஆண்டு 9, 10 வகுப்புகளுக்குரிய வர்த்தக வினா-விடைத் தொகுப்பு-மீள்பதிப்பு செய்யப்பட்டு யாழ். நகரில் முன்னணி புத்தகசாலைகளிலும், கொக்குவில் இந்துக்கல்லூரி அருகாமையிலுள்ள புத்தகசாலையிலும், மானிப்பாய் நாயகபாலன் புத்தகசாலையிலும் விற்பனையாகின்றன. ஆக்கம் த. தர்மராஜா. [20928]

### இலவச திருமண சேவை

31 வயது, அச்சுவினி, P/L. சுவிஸில் தொழில்புரியும் மணமகனுக்கு ஏற்ற மணப்பெண் சுவிஸ் நாட்டில் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (4848)

40 வயது, இந்து, பூரம், ஆசிரியைக்கு மணமகனும், 37 வயது, பரணி, செவ்வாய் 12, I. C. M. A மணமகனுக்கு மணப்பெண்ணும் மாற்றுச் சம்பந்தம் தேவை. து. விமலா, யாழ் நாச்சிமார் கோவிலடி. [4849]

41வயது,திருவாதிரை, A/L, U.K. இல் வசிப்பவருக்கு தகுந்த மணமகள் தேவை U. K. இல் உள்ளவர் விரும்பத்தக்கது. தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, இலவச திருமண சேவை, யாழ் நாச்சிமார் கோவிலடி. [4853]


# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

## A/L 94

## கலை, வர்த்தக, கணித

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | உதயன் |
| கணக்கியல் | — | ஸ்ரீ |
| வர்த். நிதியும் | — | தேவா |
| அளவையியல் | — | S. S. மனோகரன் |
| புவியியல் | — | வேலா |
| தமிழ் | — | குழந்தை |
| இந்துநாகரிகம் | — | சோதி. |
| அரசியல் | — | நவம் |
| வரலாறு | — | பிள்ளை |
| தூய / பிரயோக கணிதம் | — | திரு. கமலசிங்கம் |

- நிர்வாகி.

[சி-2307]


## இன்று

யாழ்ப்பாணம், மே 12

யாழ். மாவட்டத்தில் நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான மாநாடு ஒன்று, இன்று காலை 10 மணிக்கு அரச அதிபர் பணிமனையில் நடைபெறும். யாழ். அரச அதிபர் மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார். (த)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.

## கற்கை நெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1991/92 கல்வியாண்டிற்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடம் இருந்து 1992 ஜூன் 6 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி-1
4. சிறப்புக் கலைமாணி பகுதி-1
5. வர்த்தகமாணி பகுதி-1

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக்கலைமாணி கற்கை நெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம். (இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம் )

விண்ணப்பப் படிவங்களும் உரிய விவரங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வெளி நிலைப் பதிவு தேர்வு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ தபால் மூலமாகவோ 1992 ஏப்ரல் 20 ஆம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறாப்பரிடம் 50/- ரூபா செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும் தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிதியாளருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளை/ தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு ரூபா 12/- பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட 28 x 20 செ. மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

1990/91 கல்வியாண்டிற்காக ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

- பதிவாளர்.

யாழ்ப்பாணம்-
பல்கலைக்கழகம்,
07-04-1992.

[சி-2310]


## மீட்டல் வகுப்பு விஞ்ஞானம்

க. பொ. த. சாதாரணம் - 1992

ஆசிரியர்:
திரு. ப. ஈஸ்வரநாதன் B. Sc.

காலம்: சனி, ஞாயிறு காலை 6-30 — 8-00 வரை
இடம்: மாணவர் கலாசாலை, கரவெட்டி.
குறிப்பு: இப்பாடத்திற்கு 1991 இல் பரீட்சைக்கு தோற்றியவர்களும் சமூகமளிக்கலாம்.

[சி/2312]



## வைத்திய சேவை

நரம்புத் தளர்ச்சியா? வாதரோகமா? தலைமுடி உதிர்தலா? தலைமயிர் நரைத்தலா? உடல் பருமனா? குழந்தைகளின் பீடையா? மாதவிடாய் கோளாறுகளா? எதுவானாலும் கவலை வேண்டாம். நாடுங்கள்! நலமடையுங்கள்!!

சந்திக்கும் நேரம் | காலை 8-30 முதல் 12-30 வரை
தினமும் | மாலை 2-30 முதல் 5-00 வரை

டாக்டர். த. சிவானந்தன்
D. A. M., R. A. M. P. [Cey.]

"சிவா வைத்தியசாலை"

384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

[20944]


## ஓராண்டு நினைவு தினம்



வீர ஜனனம்:
10-10-1973

வீர மரணம்:
12-05-1991

மாவீரன் கீரோ

## இராமகிருஷ்ணன் இதயராசா

(குட்டி மாமா)

நீர்வேலி வடக்கு

நன்றி மிக்க எஜமானே!

என்னை விட்டு நீங்கள் பிரிந்து விட்டீர்களா? வீரமரணம் அடைந்து விட்டீர்கள். 30-04-1992 இல் உங்கள் முதல் ஆண்டுத் திதி கொண்டாடினார்களே! எங்கள் வீட்டில் அப்போதுதான் புலி வீர இராணுவ உடையணிந்த உங்கள் படம் ஒன்றைப் பார்த்தேன். என் உடல் சிலிர்த்தது. ஆயுதத்துடன் எவ்வளவு கம்பீரமாக நிற்கின்றீர்கள். இந்திய இராணுவம் எங்கள் வீட்டுக்கு தம்பி இருக்கா? என்று கேட்டு வரும் வேளையில் நான் வள்! வள்!! என்று குரைப்பேனே! அதைப் பார்த்து நீங்கள் சிரிப்பீர்களே! அந்தப் புன்னகை முகத்தை இனி பார்க்க முடியுமா? பெற்ற தாய் மீதா-வளர்த்த தாய் மீதா பாசம் அதிகம் என்று உங்களை பலர் கேட்கும் போது வளர்த்த தாய் மீதுதான் பாசம் அதிகம் என்று குறும்புடன் சொல்வீர்களே! இப்போது தமிழ்த்தாய் மண்மீது தான் பாசம் அதிகம் என்று காட்டி விட்டீர்களே! நீங்கள் இங்கு வாழ்ந்த காலத்தில் உங்கள் குறும்புத்தனத்துக்கு என்னையும் துணை சேர்ப்பீர்களே! '' அடேய்! குட்டி மாமா றொபேட்டுடன் வருகின்றாரடா'' என்று உங்கள் மருமக்கள் எல்லோரும் பயந்து நடுங்குவார்களே! அந்த மருமக்கள் இன்று உங்களைக் காணாது தவிப்பதைப் பார்க்க என்னால் தாங்க முடியவில்லையே! நீங்கள் போராட்டத்துக்கு போகும் போது என்னையும் அழைத்துச் சென்றிருக்கலாமே! உங்களைக் கொன்ற அந்த சிங்கள வெறிநாய்களை நான் குதறித்தள்ளியிருக்கமாட்டேனா? என் அன்புக்கு இனியவரே! என்னை தோளிலும், மடியிலும் தூக்கித் திரிபவரே? மாவீரர்கள் மடிவதில்லை! அப்படியானால் நீங்களும் மடியவில்லை! உங்கள் இலட்சியம் நிச்சயம் நிறைவேறும். உங்களால் விடப்பட்ட ஆயுதத்தை உங்கள் அண்ணன் ஈழவேந்தன் தூக்கி விட்டார். மலரும் தமிழீழம்.

உங்கள் அன்பு றொபேட்.

பெருமான் இராசமணி,
இராச வீதி,
நீர்வேலி.

[20955]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தெற்குத் தேர்தல்

அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்குவதென அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

ஆனால், பொதுத் தேர்தலை உரிய காலத்திற்கு முன்னர் நடத்தும் நோக்குடனேயே, அதற்கு இலகுவாக வாக்குத் தேடும் எண்ணத்துடனேயே அரசு இந்த உதவியை மேற்கொண்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டி வருகின்றன.

இந்தக் குற்றச்சாட்டை அமைச்சர் ஒருவர் நாடாளுமன்றத்தில் மறுதலித்துள்ளார்.

திடீர்த் தேர்தல் எதுவும் நடத்தப்படமாட்டாது. உரிய காலத்தில் தான் அது நடைபெறும் எனவும் அவர் அழுத்திச் சொல்லியுள்ளார்.

பொதுத் தேர்தல் எப்போது நடைபெறும்? திடீர்த் தேர்தல் ஒன்று வருமா? இவை குறித்து தமிழர்களுக்கென்ன அக்கறை? தென்னிலங்கையை ஐ.தே.க. ஆண்டால் என்ன, தேர்தல் நடந்து அரசு மாறி ஸ்ரீ.ல.சு.க. ஆண்டால் என்ன?!

தமிழர்களுக்கெனத் தனி அரசு ஒன்று வந்த பின்னர் தான் அதற்கான தேர்தல் குறித்து அவர்கள் அக்கறைப்பட முடியும். தமிழர் தாயகத்தை மீட்டெடுத்து, சிங்களவர்களின் அடக்கு முறையை உடைத்தெறிந்தால் தான் தமிழர்கள் தமக்கென ஒரு தனி அரசை உருவாக்க முடியும்.

எனவே தமிழ் மக்களின் முழுக் கவனமும் இப்போது, மேற்சொன்ன இரண்டு இலட்சியங்களையும் எவ்வாறு எட்டலாம் என்பதிலேயே உண்டு. போராட்டத்தைத் தொடர்ந்து விடுதலையை வென்றெடுப்பதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக உள்ளார்கள்.

எனினும் விடுதலையை வென்றெடுப்பதற்கு அவர்கள் இன்னமும் சமாதானக் கதவுகளை மூடி விடவில்லை, அவை திறந்து விடப்பட்டுள்ளன.

அதன் காரணமாக தென்னிலங்கையில் தேர்தல் உரிய காலத்தில்—1995 இறுதியில்—நடக்கும் என்பது ஒருவிதத்தில் பாதிப்பை உண்டாக்கும்.

அதாவது 1995 இல் தான் தெற்கில் தேர்தல் நடக்கப் போகிறது என்றால், தமிழர் பிரச்சினையை அரசாங்கம் எவ்வித திருப்பமோ, சமிக்ஞையோ காட்டாமல் அதுவரை இழுத்தடிக்கும் என்பதே அந்தப் பாதிப்பாகும்.

இராணுவத் தீர்வு என்றும், அரசியல் தீர்வு என்றும் மாறி மாறி நிலையற்ற ஒரு போக்கைக் கடைப்பிடிக்கும். தமிழர் பிரச்சினையில் சமாதானம் செய்யப்போகிறதா அல்லது தொடர்ந்து முரண்டு பிடிக்கப் போகிறதா என்பதில் தெளிவற்ற நிலையைத் தோற்றுவித்து காலத்தை அவமாக்கும் என்பது திண்ணம். கடந்த இரண்டு வருடங்கள் அவ்வாறு அவமானது தெரிந்த விடயமே.

தெற்கில் தேர்தல் ஒன்று வரும் பட்சத்தில் சிங்களவர்களும் அவர்களின் தலைவர்களும் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க உண்மையாகவே சமாதான வழியை நாடுகிறார்களா அல்லது தமிழர்களோடு தொடர்ந்து சண்டையிட விரும்புகிறார்களா என்பதை அது எடுத்துக்காட்டும்.

அதனை வைத்து தமிழர்களும் சமாதான வழியை முற்று முழுதாக மூடிவிடுவதா இல்லையா என்பதை நிச்சயித்துக் கொள்ளலாம். போராட்டத்தை மேலும் முனைப்படையச் செய்வதற்கான வழிமுறைகளைச் சிந்திக்க, யுத்திகளை வகுக்க வாய்ப்பு உண்டாகும்.

# தமிழின் எழுச்சிக்கு உழைக்கும் அறிஞர்; வெளிநாட்டாரை தமிழின்பால் ஈர்த்தவர்

## பேராசிரியர் சிவத்தம்பிக்கு மணிவிழாவில் புகழாரங்கள்

யாழ்ப்பாணம் மே 12

பேராசிரியர் சிவத்தம்பி பல்துறைப்பேரறிஞர். மொழி, இலக்கியம், நாடகம், நுண்கலை, சமூகவியல், மானிடவியல் துறைகளில் கைதேர்ந்த வல்லுநர் மட்டுமன்றிச் சிறந்த திறனாய்வாளருமாவார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, உலகின் எல்லாத் திசைகளிலும் உள்ள பல கலைக்கழகங்களுக்குச் சென்று வரலாற்றுப் புகழ் மிக்க எங்கள் தமிழின் சிறப்புக் குறித்து ஆக்கபூர்வமான விளக்கங்கள் கொடுத்து வெளிநாட்டு அறிஞர்களைத் தமிழின் பால் ஈர்த்து வருகிறார்.

இவ்வாறு தெரிவித்தார் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி).

நேற்று முன்தினம் மாலை நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மணிவிழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

தமிழை எல்லாத் துறைகளிலும் புகுத்தி, அதற்குப் புது வடிவம் கொடுத்து, உள்நாட்டிலும், உலக நாடுகளிலும் அதனைப் பரப்பி வரும் பேராசிரியர் சிவத்தம்பி எமது தலைமுறையில் சேவையாற்றக் கிடைத்திருப்பது நமது பெரும் பேறாகும்— எனவும் அவர் சொன்னார்.

### சகல அம்சங்களிலும் தென்படுபவர்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தமது பாராட்டுரையில் தெரிவித்ததாவது:-

பேராசிரியர் சிவத்தம்பி பல்கலைக்கழக வட்டத்திற்குள் மட்டும் நிற்கவில்லை. அவரது ஆளுமை, பலதுறை சார்ந்த திறமை என்பன பல்கலைக்கழகத்துக்கு அப்பாலும் சென்று சமூகத்தின் சகல அம்சங்களிலும் தென்படுகிறது.

இவர் இரவும் பகலும் தமிழுக்காக உழைப்பவர். உள்நாட்டில் தமிழை வளர்க்கப் பாடுபடுபவர்; உலக நாடுகளில் தமிழைப் பரப்பப்பாடுபட்டு வருபவர்.

இவர் கல்வி, கலை, இலக்கியப் பணிகளுடன் சமூகப் பணியிலும் பெரிய அளவில் ஈடுபட வேண்டும் என எதிர்பார்க்கிறோம். இந்த மண்ணிற்கான தனது பங்களிப்பை வருங்காலத்தில் மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டும்— என்றார்.

கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் பேசுகையில் கூறியதாவது:-

ஒரு காலத்தில் தமிழுக்கு எழுச்சி ஏற்படக் கூடாது என்று எதிர்ப்புகள் எழுந்த வேளை அதை எதிர்த்து போரிட்ட பேராசிரியர் அவர்கள், வெறும் நயச் சுவைகளால் மட்டும் தமிழை வளர்க்க முயலவில்லை. தமிழின் தொன்மையை, சிறப்புக்களை ஆராய்ச்சிகள் மூலம் கண்டறிந்து, உலகில் தமிழுக்கு உரிய இடம் ஏற்படக் காரணகர்த்தாவாக விளங்குபவர்.

பல்வேறு துறைகளிலும் ஆற்றல் மிக்க அவரை யாழ் பல்கலைக்கழகம் சரியாகப் பயன்படுத்தவில்லை. இன்றைய மாணவர்களிடத்தில் தமிழறிவு குறைவாகவே காணப்படுகிறது. மங்கி வரும் இந்த அறிவுத்துறையை வளம்படுத்தக் கூடிய ஆற்றலுக்கு எதிர்காலத்தில் யார் கை கொடுக்கப் போகிறார்கள்? பேராசிரியர் அவர்கள் வெளிநாடுகளில் தேடித்தந்த பெருமைகளைக் காப்பாற்ற யார் இருக்கிறார்கள்?

இவரின் நிழலில் வாழ்ந்தவர்கள் அவரைப் போன்று திறமைசாலிகளாக உருவாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தமது ஆசியுரையில் கூறியதாவது:

தமிழையும், கலைகளையும் எந்தெந்த வகைகளால் வளம்படுத்த முடியுமோ அவ்வவ் வழிகளில் பணியாற்றியவர். சமூகப் பணிகளினூடாக நாட்டிற்கும், இனத்திற்கும் தனது பங்களிப்பை மனப்பூர்வமாக வழங்கி வருபவர் - என்றார்.

### பயந்து ஒதுங்காதவர்

வண பிதா ஏ. பிரான்சிஸ் அடிகளார் தமது ஆசியுரையில் —

தமிழை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்தும் தமிழிலக்கியத்தில் புதுமைக் கருத்துக்களை உருவாக்கியும் சாதனை படைத்தவர். மதத்திலும் முற்போக்குச் சிந்தனைகளைத் தோற்றுவித்தார். காலத்தின் சவால்களுக்குப் பயந்து ஒதுங்கி நிற்காத அவரது தன்மை போற்றுதற்குரியது — என்றார்.

கிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது ஆசியுரையில் —

நலிவுற்ற மக்களை முன்னேற்ற வேண்டும் என்னும் சிறந்த மனப்பாங்கு கொண்ட பேராசிரியர் அவர்கள் நுண்கலைகள் வளரவும் பணியாற்றியதுடன் இன்று அகதிகளாக இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்களின் துயர் துடைப்புப் பணிகளிலும் உதவிவருவது குறிப்பிடத்தக்கது - என்றார்.

எழுத்தாளர் சொக்கன் பேசும்போது—

பேராசிரியர் சிவத்தம்பி சிறிய சிந்தனைகளைக் கூட ஆழமாக நோக்கும் கூர்மை கொண்டவர். தமிழை ஒரு தொல்பொருள் காட்சியகம் என்ற நிலையில் வைத்திருக்காது அதன் வளர்ச்சிக்காக ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர்— என்றார்.

இந்த மண்ணின் அடிமட்டத்தில் இருந்து உருவான எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தவர் பேராசிரியர் — என்று மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா பேசுகையில் கூறினார்.

இந்தியப் பாணியில் அமைந்த நாடகத் தமிழை யாழ்ப்பாணத் தமிழில் அமைத்து மேடையேற்ற மூலகாரணமாக விளங்கியவர் பேராசிரியர் என்று திரு. வி. ரி. அரசு பேசுகையில் சொன்னார்.

பிறநாட்டறிஞர்கள் இங்கு வரும் போதெல்லாம் தமது துறைகளில் தகவல்களைப் பெற பேராசிரியர் அவர்களை நாடும் அளவிற்குப் பெருமை பெற்றவர் என்று— உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா பேசுகையில் குறிப்பிட்டார்.

### சுயசரிதை வேண்டும்

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் பேசுகையில்—

பேராசிரியர் சிவத்தம்பி தமிழறிஞர் மட்டுமல்லர் பல்துறை நிபுணர். அவரது வாழ்க்கை அனுபவங்கள், ஆக்கங்கள் எதிர்காலப் பரம்பரையினருக்குக் கிடைக்க வேண்டும். அதன் பொருட்டு அவர் தமது சுயசரிதையை நூலாக வெளியிட வேண்டும்— என்று கேட்டுக்கொண்டார்.

### பணிகளைத் தொடர்வேன்

பேராசிரியர் சிவத்தம்பி தமது பதிலுரையில் தெரிவித்ததாவது:

தமிழும், தமிழர்களும் இழிவுபடுத்தப்படும் போது அதனைத் தடுக்க வேண்டிய பொறுப்பு தமிழர்களுடையதாகும். தமிழைப் போதிப்பதால் மட்டும் தமிழைப் பாதுகாக்க முடியாது. அதன் வளர்ச்சிக்காக, தமிழர்களின் எழுச்சிக்காக உழைக்கவேண்டும்.

இதனையே எங்களுக்குத் தமிழ் கற்றுத் தந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை போன்றோர் சொல்லித் தந்தார்கள். எமது காலத்தில் தமிழின் எழுச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய பேராசிரியர் கணபதிப்பிள்ளை போற்றப்படாமற் போனது பெருங்குறையாகும்.

பல்கலைக்கழகங்கள் வெறும் உயர் கல்விக் கூடங்களாக இல்லாமல் சமூக மாற்றத் திறன் காணவும் முயல வேண்டும். யாழ் பல்கலைக்கழகத்துக்கும் அந்தப் பணி உண்டு.

தமிழுக்கும், தமிழர்களுக்கும் தொடர்ந்தும் எனது பங்களிப்பை வழங்குவேன்— என்றார்.

(அ-111)

# இந்தியாவின் நீண்டகால நலன்களை இழக்க செய்வதாக இருக்கக்கூடாது

## புலிகள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து டிக்ஸிற் கருத்து

கொழும்பு, மே 12

''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பாக எடுக்கப்படும் எந்த முடிவும் இந்தியாவின் நீண்ட கால நலன்களை இழக்கச் செய்வதாக இருக்கக் கூடாது [Any decision on the L.T.T.E should not cost India in the long run]''

—இப்படி இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்ஸிற் கூறினார் என்று புதுடில்லியில் இருந்து வெளிவரும் 'த இன்டிபென்டென்ற்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை பிரேமதாஸா அரசாங்கம் எதிர்க்கவில்லை. எனவே இலங்கை விவகாரங்களில் புதுடில்லி தனது பிடியை விட்டுவிட்டதாக காட்டக்கூடாது என்று திரு. டிக்ஸிற் விரும்புகிறார் என்றும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேமாதிரியான அபிப்பிராயங்களை இந்தியாவின் கூட்டு உளவுக் குழுவும் மற்றும் றோ அமைப்பும் தெரிவித்திருப்பதாகவும் அப்பத்திரிகைக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பத்திரிகைக் கட்டுரையில் மேலும் எழுதப்பட்டிருப்பதாவது;

விடுதலைப்புலிகள் மீது தடை விதிப்பது பற்றி பிரதமர் நரசிம்மராவ் முடிவு செய்வார். இத்தடையைக் கொண்டு வருவதற்கு முன்னர் இதன் சாதக, பாதகங்கள் பற்றி புதுடில்லி அரசியல் தலைமைத்துவம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது என்று பிரதமரின் உதவியாளர்கள் கூறுகின்றனர்.

### முடிவு எடுக்க

[illegible]

தடையை எப்படி அமுல் செய்வது என்பதுதான் பிரதான கேள்வியாகும்.

பிரதமரின் விருப்பத்திற்கு இணங்க, மத்திய உள்துறைச் செயலாளர் மாதவ் கொட்போல் தலைமையிலான செயலாளர் கமிட்டி இது விடயத்தில் இறுதி முடிவு எடுக்கக் கூடியது.

இது பற்றிய விவகாரத்தில் ஒருமனதான முடிவுக்கு அக்கமிட்டி வரவில்லை. அதன் காரணத்தினால், இவ் விவகாரம் குறித்த சகல அம்சங்களையும் ஆராய்ந்து, விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வது தொடர்பான ஒழுங்கு விதிகள் பற்றி முடிவு எடுப்பதை பிரதமரிடம் விட்டுவிடுவது என்று அக்கமிட்டி முடிவு செய்தது.

தடை விவகாரம் குறித்து வெளியுறவு அமைச்சுக்கும் உள்துறை அமைச்சுக்கும் இடையேயும்— உளவு நிறுவனங்களான உளவு பணிபகத்திற்கும் [Intelligence Bureau] அமைச்சரவை செயலகத்தின் றோ அமைப்புக்கும் இடையேயும் பலத்த கருத்து வேறுபாடுகள் இருப்பதாக உயர்நிலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டிற்கு வெளியே உள்ள ஓர் அமைப்பை தடா சட்டத்தின் கீழ் எப்படி கொண்டு வருவது என்பது குறித்து சட்டத்துறை அமைச்சின் நிலை தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை.

திரு டிக்ஸிற் போன்றே 'றோ' அமைப்பும் கருத்து வெளியிட்டுள்ளது.

இலங்கையில் வடபகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரம் தான் [greater say] தொடர்கின்றது என்று 'றோ' தெரிவித்துள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை அப்புறப்படுத்துவது என்பது இயலாத காரியமாகவே இருக்கும்.

விடுதலைப் புலிகளின் வடக்கு—கிழக்கு நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த படையினர் முயற்சிகள் எடுத்திருப்பினும் அவர்களின் நடமாட்டம் இன்னும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

### வெற்றிக்குக் காரணம்

இராணுவ அழுத்தங்களுக்கு மத்தியிலும் பெரும் எண்ணிக்கையில் போராளிகளை போர் முனையில் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு நகர்த்துவது, பலவீனமான நிலையிலுள்ள இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்துவது ஆகியவற்றில் விடுதலைப் புலிகள் திறமையுடன் செயற்படுகின்றனர்.

இதுவே அவர்களின் போராட்டத்திற்கு வெற்றியாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் மீது சண்டை நடத்தும் அதே நேரத்தில் கிழக்கிலும் வன்னியிலும் ஆதிக்கத்தைச் செலுத்தக் கூடிய அளவு துருப்புகள் இல்லை என்பதுதான் படையினர் எதிர்நோக்கும் பிரச்சினையாகும்.

கிழக்கில் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் மறைந்திருந்து நடத்தும் தாக்குதல்கள், விடுதலைப் புலிகளின் உயரிய உத்திகள் ஆகியன மற்றும் தரையில் ஒரு பகுதியில் ஆதிக்கம் செலுத்துவது பற்றி சில கருத்துகளைத் தருகின்றன.

போர் முனையில் பழக்கப்பட்ட யுத்தமுனை அதிகாரிகள் பின்வருமாறு கூறுகிறார்கள்:-

### புலிகளின் புதிய கண்டுபிடிப்புகள்

★ ''இப்பகுதியில் விடுதலைப் புலிகள் கையாளும் போர் உத்திகள் விதிமுறைப் புத்தகங்களில் கூட இல்லாதவையானவாக உள்ளன. வெற்றிகரமான விடுதலைப் புலிகளின் கண்டுபிடிப்புகளுக்கு அவை உதாரணமாகவும் உள்ளன''.

★ ''விடுதலைப் புலிகள் மறைந்திருந்து நடத்தும் U வடிவிலான தாக்குதலுக்கு படையினர் பலர் இரையாகியுள்ளனர். அந்த U-வடிவான தாக்குதலில் இருந்து தப்புவது உண்மையிலேயே சாத்தியமற்றதாகும்.

★ ''விதிமுறையளவில் அந்த வித [U] தாக்குதல் வெற்றியளிக்க முடியாது. காரணம், மறைந்திருந்து தாக்குதல் நடத்துபவர்கள் இரண்டு பிரிவாக இரு மருங்கிலும்— ஒரு பிரிவினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு மறுபிரிவினர் இலக்காகக் கூடிய விதத்தில் இருந்து— இத்தாக்குதலை நடத்த வேண்டும்.

★ ''ஆனால் விடுதலைப் புலிகள் இப்படி இடையில் சிக்குப்படாமல் [Crossfire] துப்பாக்கிச் சூடுகளை மிகக் கவனமாகத் திட்டமிட்டு தவிர்த்துக் கொள்கின்றனர்.''

★ ''U வின் இரு மருங்கிலும் அவர்கள் மண்மூட்டைகளின் பின்னால் அல்லது தரையில் படுத்துக்கொண்டு — அந்த பாதுகாப்பில் இருமருங்கிலும் இருந்து சுடுகின்றனர். அந்த துப்பாக்கிப் பிரயோகம் 'ஆர்க்' வடிவில் கட்டுப்பாடான முறையில் நடத்தப்படுகிறது.

★ ''அந்த மறைந்திருந்து நடத்தும் தாக்குதலுக்குள் நாம் இழுக்கப்படுகின்றோம். பின்னர் ஒரே நேரத்தில் மூன்று பக்கங்களிலும் இருந்து துப்பாக்கிச் சூடுகள் சரமாரியாகப் புறப்படுகின்றன.''

இப்படி அவர்கள் கூறுகிறார்கள்.

''விடுதலைப் புலிகள் முதலில் முன்னுக்கு நின்று சுடுகின்றனர். நாம் இடது பக்கம் ஓடுகையில், அந்தப் பக்கத்தில் இருந்து எம் மீது சுடுகின்றனர். நாம் வலது பக்கம் திரும்பி ஓடும்போது அந்தப்பகுதியில் இருந்தும் எம் மீது விடுதலைப் புலிகள் சுடுகின்றனர். இப்படியான மறைந்திருந்து நடத்தும் தாக்குதல் திரண்டு செல்லும் படையினருக்கு பேரழிவாக இருக்கிறது. இந்தத் தாக்குதலில் இருந்து தப்ப ஒரேவழி விசாலமான முன்னரங்கம் [Broad Front] ஒன்றை ஏற்படுத்தி படையினர் செல்வதுதான் — இப்படி அந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.''

(உ-எ)

---

## இந்தியாவின்....

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]
ளது.

### தடை இலங்கைக்கு சாதகமாகிவிடலாம்

புதுடில்லியின் முக்கியத்துவத்தைக் கட்டுப்படுத்த கொழும்பு — டாக்கா — இஸ்லாமபாத் — என்ற இணைப்பை கட்டி எழுப்பி, இந்தியாவைத் தனிமைப்படுத்தும் சாத்தியக்கூறு பற்றி இலங்கை ஆராய்ந்து வருகிறது.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தடைவிதிப்பது இலங்கை பற்றிய இந்தியாவின் தெரிவுகளை [options] நிரந்தரமாக மூடிவிடலாம். இது இலங்கைக்குச் சாதகமாக அமைந்துவிடும்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் ஜனாதிபதி பிரேமதாஸா ஒரு சமயம் பேசிக் கொண்டிருந்தார்.

இந்தியாவில் உள்ள மாநிலங்கள் சிதறிப்போகும் நிலை குறித்து பிரேமதாஸா அவர்களிடம் அப்பொழுது தெரிவித்தார்.

அப்பேச்சு பற்றி இந்திய கூட்டுப் புலனாய்வு கமிட்டி இந்திய வெளியுறவு அதிகாரிகளுக்குத் துப்புக் கொடுத்தது.

### புலனாய்வு பிரிவுக்கு அக்கறை இல்லை

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்வது குறித்து இராணுவப் புலனாய்வுப் பிரிவு கூட அவ்வளவு அக்கறை காட்டுவதாக இல்லை.

இருந்தும் விடுதலைப் புலிகள் மீதான கண்காணிப்பில் விட்டுக்கொடுப்பு இருக்கக் கூடாது என்று பாதுகாப்பு அமைச்சு ஆலோசனை கூறியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பான்மையான அபிப்பிராயம் என்னவெனில் — விடுதலைப் புலிகள் மீதான தடை குறுகிய கால பயனையே தரும்; நீண்ட கால பயனைத்தராது என்பதே ஆகும்.

இப்படி 'இன்டிபென்டென்ற்' பத்திரிகையில் வெளியான அரசியல் பகுப்பாய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இ-எ]

---

## தெரிவுக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
டும் என்ற எதிர்க்கட்சியின் கோரிக்கையை அரசு நிராகரித்ததைத் தொடர்ந்து அரசுடன் ஒத்துழைப்பதில்லை என்று எதிர்க்கட்சிகள் தீர்மானித்தன. அதனைத் தொடர்ந்தே முன்கண்ட பிரேரணை கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12-5-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

# தமிழர் நிலையை உலகுக்கு காட்டுவதில் பங்காற்றியவர்

## ஆயரின் முப்பெருவிழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், மே 12

''நீண்டகாலமாக தமிழ் மக்கள் கொடுமைகளையும், அழிவுகளையும் சந்தித்து அவற்றுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். இந்த நிலையையும், தமிழ்மக்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் உலகுக்கு எடுத்துக் காட்டுவதில் யாழ். ஆயர் மிகப் பெரும் பங்கு வகித்துள்ளார். அதே பணியை அவர் மண்ணுக்காகத் தொடர்ந்து ஆற்றவேண்டும்.''

— இப்படிக் கோரிக்கை விடுத்தார் புலிகளின் பிரமுகர் திரு. யோகரத்தினம் யோகி.

யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் வெள்ளி - பொன் - பவள விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

யாழ். பேராலயத்தில் நேற்றுமாலை நடந்த திருப்பலியை அடுத்து ஆயர் தியோகுப்பிள்ளை நாதஸ்வர இசை முழக்க திறந்த வெளியரங்குக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகள் இறை வணக்க வரவேற்பு நடனத்துடன் ஆயரை வரவேற்றனர்.

யா. மறைவட்ட குரு முதல்வர் அருட்திரு எஸ். ஏ. மைக்கல் சாமி தலைமையில் முப்பெரு விழாக் கூட்டம் நடைபெற்றது.

இலங்கை கத்தோலிக்க ஆயர் அவைத் தலைவர் பேரருள் பெருந்தகை நீக்கிலஸ் மார்க்கஸ் பேசுகையில்—

இன்று நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து மக்களும் ஆயர்களும் இங்கு கூடியிருப்பது ஆயர் மன்றத்தின் மூத்த தலைவரின் விழாவில் பங்கு பற்றவேயாகும் — என்றார்.

இவ்விழாவில் நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், அருட்திரு ஏ. சேவியர் குரூஸ், அருட்செல்வி மே. யுடெக்ஸி, தென்னிந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதீன ஆயர் கலாநிதி டீ. ஜே. அம்பலவாணர், யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்.

விழா சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. [அ-3-51-111]

---

## அள்ளப்பட்ட..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ நேட்டோ ரவைகள் — 600
★ 60 மி.மீ. ஷெல்கள் — 14
★ 60 மி.மீ. பரா ஷெல்கள் — 4
★ 60 மி.மீ. ஷெல் பூஸ்டர் — 20
★ ரி 81 ரக துப்பாக்கி ஷெல் — 1
★ ஜே. ஆர். கிரனேட் — 26
★ துப்பாக்கி கத்திகள் — 2
★ நச்சுவாயுதடைக் கருவி — 1
★ வெடிக்கவைக்கும் கருவி — 2
★ தொலை நோக்கி — 1
★ ஹோல்ஸர்கள் — 17
★ விங்குகள் — 2,000
★ சப்பாத்து — 46 சோடி
★ ரவைத் தடுப்பு கவசஅணி — 3

[உ-3-165-117]

---

## தொண்டமான் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
குழு ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சாத்தியமான முயற்சிகள் அனைத்தையும் நான் மேற்கொள்வேன். அம் முயற்சி தோல்வி காணுமானால் நான் இன்னொரு முயற்சியை (Initiative) எடுப்பேன்'' என்றும் அமைச்சர் தொண்டமான் உறுதியாகக் கூறினார்.

''இதன் அர்த்தம் நீங்கள் தெரிவுகுழுவில் நம்பிக்கை இழந்து விட்டீர்கள் என்று கொள்ளலாமா?'' — என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் —

''எந்த விஷயம் குறித்தும் நான் முன்கூட்டியே தீர்ப்புக் கூற விரும்பவில்லை. தெரிவுக் குழுவின் உறுப்பினன் என்ற முறையில் தெரிவுக் குழுவில் நான் நம்பிக்கை வைத்துள்ளேன். எல்லாம் நன்மைக்கே என்ற நம்பிக்கையுள்ளவன் நான். பேச்சுவார்த்தைகளை நான் நம்புகின்றேன்'' — என்றார்.

வடக்கு - கிழக்கு நெருக்கடிக்கு தீர்வுகாண எந்தக் கட்சி எடுக்கும் முயற்சியையும் தாம் வரவேற்பதாகக் கூறிய திரு. தொண்டமான், பௌத்த மற்றும் கத்தோலிக்கத் தூதுக்குழுக்களின் யாழ்ப்பாண விஜயங்கள் இனப் பிரச்சனையில் ஆழ்ந்த புரிந்துணர்வை ஏற்படுத்த உதவியுள்ளன என்றும் சொன்னார். (உ-எ)

---

## ஆனையிறவில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பிரதான முகாமை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

தாக்குதலில் பல படையினர் படுகாயமுற்றனர்.

இவர்கள் பிரதான முகாமை நோக்கிஓடிச் சென்று தப்பிக் கொண்டனர்.

இத்தாக்குதல் சாதனையின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தரப்பில் இரண்டாம் லெப்ரினன்ட் சலீம் அல்லது சாந்தன் [கந்தையா பாலசுப்பிரமணியம் — கிளிநொச்சி], லக்சன் [ரவிசங்கர் மகாலிங்கம் கௌரிமுகுந்தன் — திருமலை] ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

[உ-3-165-117]

---

## ராஜீவ் கொலை விசாரணை:

# 6 ஈழத்தமிழர்களின் வாக்குமூலங்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன

கொழும்பு, மே 12

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக ஆறு இலங்கைத் தமிழர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பெற்று கொழும்பு அரசு இந்தியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

ராஜீவ் கொலைச் சம்பவம் இடம்பெற்ற காலத்தில் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் மற்றும் பொட்டம்மான் ஆகியோரின் நடமாட்டங்கள் பற்றியே அந்த அறுவரிடமும் இருந்து வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன என்றும் ..

இந்த வாக்கு மூலங்கள் ராஜீவ் கொலை வழக்கை விசாரணை செய்யவிருக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் வேண்டுகோளின் மீது அந்த ஆறு பேரிடம் இருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டன என்றும்—

அவர்களில் சிலர் காவலில் உள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

[உ-எ]

---

## வடக்கே...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
தடுப்பு முகாமில் இருந்து படையினரின் ஒத்தாசையுடன் தப்பிச் சென்று சிறிது காலம் தங்கள் குடும்பத்தினருடன் தங்கி விட்டுத் திரும்புவதாகவும் —

இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாத நிலையில் தான் அச்சந்தேக நபர்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்து வடக்கு - கிழக்கு போர்முனைக்கு அனுப்பும் யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இந்த நடவடிக்கை ஜே. வி. பியினருக்கு உதவுவதாக அமைந்து விடக்கூடும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தொடர்ச்சியாக தடுப்புக் காவலில் தீவிரவாதிகளை வைத்திருப்பது, அவர்கள் ஒழுங்கான தீவிரவாத இயக்கம் ஒன்றைக் கட்டி எழுப்ப உதவுவதில்தான் முடியும் என்றும் விசாரணையாளர்கள் எச்சரித்துள்ளனராம்.

[உ-எ]

---

## தமிழ்க் குழு ஒன்றின் உறுப்பினர்கள் மூவர் தப்பினர்

சென்னை, மே 12

தமிழ்க் குழு ஒன்றைச் சேர்ந்த மூவர் புதுக்கோட்டை பாஸ்டன்பள்ளி முகாமில் இருந்து தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மயில்வாகனம், விநாயகமூர்த்தி, மைக்கல் ஆகிய இம் மூவரும் ஈ. பி. ஆர். எல். எப். உறுப்பினர்கள் என்றும் —

கடந்த நான்காம் திகதி இச் சம்பவம் நடந்தது என்றும் — மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

---

## தமிழக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
செய்த மனுவை புதுடில்லி உயர் நீதிமன்றம் கடந்த வாரம் நிராகரித்திருந்தது தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்தே பொலீஸார் திரு. செல்வத்தை நேற்றுக் கைது செய்தனர்.

சட்டசபை செயலாளரின் அறைக்கு கூட்டிச் செல்லப்பட்ட அவர் தமிழக சபாநாயகர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

பத்திரிகையில் பிரசுரமான செய்திகளுக்காக தாம் மன்னிப்புக்கோரமுடியாது என்று திரு. செல்வம் சபாநாயகரிடம் மீண்டும் வலியுறுத்திக் கூறினார்.

தன்னை விடுதலை செய்தால், தாம் சட்டசபை மீண்டும் கூடும் முதல் நாள் சட்டசபையில் ஆஜராவதாக திரு. செல்வம் சபாநாயகருக்கு உறுதிமொழி வழங்கினார். அதனைத் தொடர்ந்து திரு. செல்வம் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பத்திரிகையாளர் சுனில் மற்றும் கோவை மாலை முரசு ஆசிரியர் சுந்தர் ஆகியோர் மீது சபாநாயகர் பிறப்பித்த கைது வாரண்டுகள் மீது புதுடில்லி உயர்நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்து உள்ளது தெரிந்ததே. [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org